1974 ஏப்ரல் 23]

இரும்புக் கனி படிவங்கள்

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) திருவண்ணாமலையருகே இரும்புத்தாதுக்கள் அடங்கிய மண் எடுக்கப்பட்டு பரிசீலனைக்காக ஜப்பான் நாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அப்பரிசீலனையின் முடிவு என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) திருவண்ணாமலையருகே இரும்புக்கனி படிவங்களை ஆராய்ந்து ஜப்பானிய நிபுணர்கள் சமர்ப்பித்த அறிக்கை தமிழக அரசின் அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டது. ஜப்பானிய நிபுணர்களுடன் இந்த இரும்புக்கனிகளை மேம்படுத்தி செறிவுபடுத்தி உபயோகிக்க பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இந்த இரும்புத் தாதுக்கள் பற்றிய ஆராய்ச்சிகள் இன்னும் தொடர்ந்து தமிழ்நாடு கனிவள அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, அங்கே போதுமான அளவுக்கு இரும்புக் கனி கிடைக்கின்றதாவென்று அறிய விரும்புகிறேன். அங்கே சிறந்த கனி வளத்தை ஏற்படுத்த முடியுமென்று அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்களாவென்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, மொத்தம் கிடைப்பது 14 கோடி டன். அதில் 'எப்.இ. கன்டென்ட்' 37 சதவிகிதம். பெரும்பாலும் சேலத்தை ஒட்டிய இரும்புக் கனியென்ற முறையில் அது நல்ல முறையில் பயன்படுமென்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது.

Central Electricity Board, Tiruchirappalli

*329 *Q.*—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that more than 1,000 persons entered into the Office of the Central Electricity Board, Tiruchirappalli, during working hours on 9th November 1972 and tried to assault office bearers of the Accountants Association;

(*b*) whether they attacked also the workers of the Electricity Board present there at that time;

(*c*) whether the portraits of Aringnar Anna and Doctor Kalaignar Karunanidhi in that building were broken;

(*d*) whether it is a fact that the telephone and other articles in the Association were damaged;

(*e*) if so, the estimated value of the articles damaged; and

(*f*) the action taken by the Government in this regard?

மத்திய மின்சார வாரியம், திருச்சி

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 9—11—1972-ஆம் நாள் திருச்சி மத்திய மின்சார வாரிய அலுவலகத்தில் வேலை நேரத்தில் சுமார் 1,000 பேர்களுக்கு மேற்பட்ட நபர்கள் உள்ளே புகுந்து கணக்காயர் சங்கத்தலைவர்களைத் தாக்க முயற்சித்தார்களா?

(இ) அவர்கள் அங்கிருந்த மின்சார வாரிய ஊழியர்களையும் தாக்கினார்களா?

(உ) சங்கக் கட்டிடத்தில் உள்ள அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் கருணாநிதி இவர்களுடைய படங்கள் உடைக்கப்பட்டனவா?

(எ) சங்கத்திலுள்ள தொலைபேசி மற்றுமுள்ள சாமான்களும் சேதப்படுத்தப்பட்டது உண்மையா?

(ஐ) ஆமெனில், சேதப்படுத்தப்பட்ட பொருள்களின் மதிப்பீடு சுமார் எவ்வளவு?

(ஒ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனத்திற்கும், கணக்காயர் சங்கத்திற்கும் மோதல் ஏற்பட்டது. இதன் விளைவாக சங்கத்திலுள்ள 3,000 ரூபாய் பெருமானமுள்ள பொருள்கள் சேதமுற்றன. இது சம்பந்தமாக போலீசார் ஒரு வழக்கு பதிவு செய்து, அந்த வழக்கு நீதி மன்றத்தில்—'அடிஷனல் பஸ்ட் கிளாஸ் மேஜிஸ்டிரேட் கோர்ட்'-ல் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு மறு விசாரணைக்கு 27-4-1974 அன்று போடப்பட்டிருக்கிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, சம்பவம் நடந்த தினத்தன்று போலீசார் அலுவலக வாசலில் பல மணி நேரம் காத்திருந்தும், உள்ளே கலவரங்கள் நடந்தபோது, உள்ளே இருக்கும் ஆபீசர்கள், கலவரத்தைத் தடுக்க, தக்க நடவடிக்கை எடுக்க போலீசாரை அனுமதிக்கவில்லையென்பதை அரசு அறியுமாவென்று அறிய விரும்புகிறேன்.

1974 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, இரண்டு சங்கத்திற்கும் மோதல் ஏற்பட்ட நேரத்தில் போலீசார் வரவழைக்கப்பட்டார்கள். தேவை இருக்குமானுல், சொல்வதாக அதிகாரிகள் சொன்னுர்கள். அதற்கிடையில் அந்தச் சம்பவம் நடந்து முடிந்துவிட்ட காரணத்தால், முழு விவரமும் தெரிய வேண்டுமென்று போலீசில் புகார் செய்யப்பட்டு, வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இந்த இரண்டு சங்கங்களுக்கும் என்ன காரணத்தால் மோதல் ஏற்பட்டதென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. தீர்ப்புக்குப் பிறகுதான் என்ன காரணத்தால் மோதல் ஏற்பட்டதென்பது தெரியும்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, வழக்கு நீதி மன்றத்தில் இருப்பதால் விவரங்களைச் சொல்ல இயலாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஒரு சமாசாரம் நீதி மன்றத்தில் இருக்கும்போது, அதனுடைய விவரங்களைக் கேட்கக்கூடாது.

Government Forests.

*330 Q—THIRU M. SANKARLINGAM: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that trunks of trees in Government forests were stolen in Kanyakumari District;

(*b*) if so, the value of the same;

(*c*) the year in which the theft took place;

(*d*) whether any complaint was received by Government in this regard; and

(*e*) if so, the action taken thereon?

அரசுக் காடுகள்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், அரசுக் காடுகளிலுள்ள தடிகள் களவு போனது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?